**கொபெய்கனே பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொபெய்கனே பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 31,700,777 தொகையான ஆரம்ப மீதியை சரி செய்யும் போது அதற்கு நேரொத்த ஒப்பீட்டுத் தரவுகள் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் போன்ற முக்கியமான நிதிக்கூற்றுக்களின் விடயத்திற்குரிய பட்டோலைகளை சமர்ப்பிக்கும் போது அதற்குரிய ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கிரயம் அல்லது தேறிய பெறுமதி என்ற இரண்டில் குறைந்த பெறுமதிக்கு ஆண்டின் இறுதியிருப்பு பெறுமதியிடப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 02 நிலையான வைப்புக்கள் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் முறையே ரூபா 75,822 தொகை மற்றும் ரூபா 289,393 தொகையான வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், நிலையான வைப்பு மீதியும் ரூபா 365,215 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு நிர்மாண வைப்புக் கணக்கின் மீதிக்கும் பட்டோலைகளின் மீதிக்கும் இடையே ரூபா 162,389 தொகையான வேறுபாடு குறிப்பாக இனங்காணாமல் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் அகற்றப்பட்டிருந்தது.

(இ) முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 6,000,000 தொகை உழைக்கப்பட்ட வருமான மூலமான சேவைகளுக்கான கட்டணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) வாராந்த சந்தைக் கட்டணம் ரூபா 2,190,780 தொகை உழைக்கப்பட்ட வருமான மூலத்தில் காணப்படாத ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது ரூபா 117,346 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் உதிரிப் பதகங்கள் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஊ) ‘‘அலவ்வேகம வத்த’’ பொதுக் காணியின் ஒரு கூறின் ரூபா 100,000 பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கழிவுப் பொருள் நிலையத்தில் ரூபா 3,004,453 தொகையான நிர்மாணங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 1,434,460 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களுக்குரிய உபயோக பதிவேடுகளின் மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் பிணை வைப்பு ரூபா 160,038 ஆக இருந்த போதிலும், ஊழியர் பிணை முதலீடு ரூபா 157,938 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 24,849,399 தொகையான பெறவேண்டிய கணக்கு மீதியில் 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 1,905,136 தொகை மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 37,302 ஆக நிலுவைப் பணம் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,798,049 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் பாதுகாப்பு பிணை வைப்பாக இனங்காணக்கூடிய பெறுமதி தவிர ஏனைய பொறுப்புக்களைச் செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 8,868,421 கூட்டுப்பெறுமதியான 03 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான பட்டோலை, காலப்பகுப்பாய்வு மற்றும் மெய்மையாய்வு அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த விடயங்கள் தொடர்பாக விரிவாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1958 இன் 2 ஆம் இலக்க தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோப்பு (சுற்றாடல் கட்டுப்பாடு) (திருத்தம்) அதிகாரச் சட்டம் | |
| 23 அ(1) ஆம் பிரிவு | கஹட்டகஹமுல ஹேன வத்த என்ற பெயருடைய 12 ஏக்கர் 3 றூட் 36.2 பேர்ச் அளவான தென்னங் காணியை கூறிடுவதற்காக காணி கூறிடல் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றி சமர்ப்பிக்கப்பட்ட 06 திட்டங்களுக்காக சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| i. நிதிப்பிரமாணம் 371 (2) | உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக முற்பணம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், காலதாமதத்துடன் ரூபா 61,205 தொகையான 03 முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருந்தன. |
| ii. நிதிப்பிரமாணம் 571 (2) | வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை விஞ்சிய ரூபா 75,928 தொகையான 09 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி | |
| 178 (3) ஆம் விதி | மோட்டார் கிறேடரை வாடகைக்கு எடுக்கும் போது 04 வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் கூறுவிலைகள் பெறப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,920,871 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,177,503 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,743,368 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா 2,497,244 இனால் உயர்வடைந்து சென்றமை நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பெற வேண்டிய வருமானங்களில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,816,401 தொகையான திரண்ட நிலுவை 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 12,523,845 வரை அதிகரித்திருந்தது.

#### 2.3.2 ஆதன வரி

முன்னைய ஆண்டுகளில் ரூபா 171,278 தொகையான நிலுவை ஆதன வரியுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 190,744 தொகை அறவிடவேண்டியிருந்தது.

#### 2.3.3 வாடகை

ஆண்டில் சிட்டையிடப்பட்ட வாடகை வருமானத்தில் 99 சதவீதத்திற்குச் சமமான ரூபா 1,361,798 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறமின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 மார்ச் 17 ஆந் திகதிய பெறுகைகள் தீர்மானத்தின் அடிப்படையில் ஒன்று ரூபா 81,900 வீதம் கணனி இயந்திரங்களைக் கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும் போது, 07 மாத தாமதத்துடன் 2016 ஒக்தோபர் மாதத்தின் போது 03 கணனி இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் போது ரூபா 7,800 தொகை மேலதிகமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) பணியிடமாற்றம் / மரணித்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் ரூபா 40,584 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீர் மற்றும் மின்சார வசதிகள் வழங்கப்படாதிருந்த போதிலும், 02 ஏக்கர் 02 றூட் அளவான அலவ்வேகம வத்த ஏல விற்பனை செய்வதற்குரிய கூறிடல் திட்டம் திகதி குறிப்பிடப்படாமல் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 12 ஏக்கர் 03 றூட் 36.2 பேர்ச் அளவான மொறகொல்லயில் அமைந்துள்ள கஹட்டமூலஹேன காணி, ஆதனங்கள் விற்பனை செய்யும் கம்பனியினால் உரிமையாளரிடமிருந்து கொள்வனவு செய்யாமல் கொள்வனவு செய்வதற்கு இணங்கிய உடன்படிக்கையின் அடிப்படையில் 06 கூறிடல் செயல்திட்டங்கள் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மின்சாரம் மற்றும் குழாய் நீர் என்பன வழங்கப்படாதிருந்ததுடன் உள்ளக வீதிகள் 30 அடி அங்கீகரிக்கப்பட்ட விட்டத்தில் அமையும் பிரகாரம் வளைவுகள் 05 அடையாளங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூறிடல் திட்டத்தின் பிரகாரம், பொது வசதிகளுக்கான காணி 179.6 பேர்ச் ஆக இருக்க வேண்டிய போதிலும், 170.6 பேர்ச் அளவில் ஒன்றுக்கொன்று தூரத்தில் அமைந்துள்ள 05 இடங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்தது. மேலும், அந்த பொதுக் காணியில் 92.15 பேர்ச் அளவான 03 கூறுகளுக்குரிய காணியின் முடிவில் கஷ்டப் பிரதேசங்களில் ஒதுக்கப்பட்டிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முறையற்றதாக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கை செய்யாது திகதியின்றிய மதிப்பீட்டின் அடிப்படையில் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 24 வீதிகளில் மோட்டார் கிறேடர் இடும் முதலாவது கட்டத்திற்காக ரூபா 1,031,450 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 02 ஆவது கட்டத்தின் கீழ் 14 வீதிகளுக்கு மோட்டார் கிறேடர் இடும் 132 மணித்தியாலங்களுக்காக ரூபா 462,490 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் முதலாவது கட்டத்தை மேற்கொண்ட ஒப்பந்தகாரருக்கே வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் வேலை வைப்புக்களின் பட்டோலையின் பிரகாரம் சனவரி 01 இல் உள்ளவாறு உள்ளடக்கப்படாதிருந்த போதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்தப் பட்டோலையில் 2014 சனவரி 24 வைப்புத் திகதியாக குறிப்பிடப்பட்டு ரூபா 50,000 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 53-6111 ஆம் இலக்க கெப் வண்டி 2015 ஆகஸ்ட் 19 ஆந் திகதி முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) வன்னிகம நூலகக் கட்டிடம் பழுதுபார்க்கப்படாமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி நன்கொடையாகக் கிடைத்த 133 கம்பித் தூண்கள் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடன்பெற்று 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 3,636,467 தொகை செலவில் சபைக்கு முன்னுள்ள வீதியின் அபிவிருத்தி மற்றும் 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 2,000,000 தொகையான பொருளாதார நிலையக் கட்டிடம் என்பன நிர்மாணிக்கப்பட்ட போதிலும் அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது மீண்டும் வீதி அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டிடத்தை உடைத்து அகற்றும் அடிப்படையில் அது பயனற்ற செலவினமாக இருந்தது.

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 9,002,152 தொகையான 07 ஒப்பந்தங்களுக்காக கூறுவிலை பெற்றுக்கொள்ளல் வெளிப்படையாக இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 6,177,505 தொகையான 04 வேலைகளுக்கான பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் ''கொபெய்கனே பிரதேச செயலகத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து'' மாத்திரம் எனக் குறிப்பிட்டு போட்டி வரையறுக்கப்பட்டிருந்தது.

(இ) மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 78,095 தொகையான கழிவுப்பொருள் நிலையத்தின் நுழைவு வீதி புனரமைத்தல் வேலை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கழிவுப்பொருள் நிலையத்தில் கிணறு நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் தாமதப்பட்டதன் காரணமாக உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 18,276 தொகையான தாமதக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.7 கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளில் காணப்படுகின்ற கழிவுப்பொருட்கள் சுற்றாடலில் விடுவிக்கப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது 14 வருடங்களுக்குரிய மொத்தத் தொகையும் அல்லது அதற்கு அண்மித்த அளவொன்று சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொதுமக்கள் கோரிக்கைகளைப் பெற்று திட்டமிடப்பட்ட 43 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வவ்போது எனது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | கணக்கீடு | i. பெறுமதி சரியாக வகைப்படுத்தப்படாமை |
| | | ii. ஆண்டின் போது சேர்க்கப்பட்ட சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை |
| | | iii. கணக்கு மீதிகள் பட்டோலைகளுடன் இணங்காமல் காணப்பட்டமை |
| | | iv. கணக்குப் பதிவுகளுக்காக ஒப்பீட்டு ரீதியான பெறுமதியில் சமர்ப்பிக்காமை |
| (ஆ) | வருமான நிர்வாகம் | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| (இ) | வீட்டு ஆதனங்களை அபிவிருத்தி செய்து விற்பனை செய்தல் | உப விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருள் தொடர்பாக வேலைத்திட்டமொன்று காணப்படாமை |
| (உ) | ஒப்பந்த நிர்வாகம் | i. முறையாக ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படாமை |
| | | ii. தாமதக் கட்டணம் அறவிடப்படாமை |
| | | iii. பௌதீக செயல்முன்னேற்றம் நலிவாக இருந்தமை |
| (ஊ) | சொத்துக் கட்டுப்பாடு | சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை |

(இணைப்பு)

| செலவினத் தலைப்பு இலக்கம் | செலவினத் தலைப்பின் பெயர் | நிதிஏற்பாட்டுத் தொகை | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| 01-103-03 | இயந்திரப் பொறிகள் மற்றும் மின்சாரப் பொருட்கள் | 20,000 | - |
| 01-107-01-i | மானியம் | 20,000 | - |
| 02-207-02-iv | நீர்ப்பீடண நோய் நிவாரண நிகழ்ச்சித் திட்டம் | 15,000 | - |
| 02-207-02-vii | நகர மக்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | 10,000 | - |
| 02-207-02-x | வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் | 10,000 | - |
| 02-207-02-xi | சிரமதான நிகழ்ச்சித் திட்டம் | 2,000 | - |
| 02-207-2-xii | டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 10,000 | 1,190 |
| 03-305-01 | மதிப்பீட்டு நில அளவைக் கட்டணம் | 20,000 | - |
| 05-504-02-ii | பொதுக் கிணறு | 15,000 | 4,950 |
| 05-504-03 | பொது நீராடல் தடாகப் பராமரிப்பு | 15,000 | - |
| 06-604-2-i | கட்டிடத் திருத்தம் | 30,000 | 4,950 |
| 06-604-2-ii | உபகரணப் பராமரிப்பு | 50,000 | 540 |
| 06-607-03-xiv | உலக சிறுவர் தின நிகழ்ச்சித் திட்டம் | 20,000 | - |
| 06-609-03 | சிறுவர் பூங்கா அபிவிருத்தி | 10,000 | - |